UNIVERSITY OF SRI LANKA - JAFFNA C. ... LIBRARY
RECEIVED
1981 -5- 27
PERIODICALS
DIVISION

**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 15TH MAY, 1981 No. 20

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

*JDCSI*

## Service of Remembrance

The Life and Ministry of Rev. J. M. Singanayagam was remembered at a Special Service of Thanksgiving held at the Manipay Church at 4.30 p. m. on Saturday, 9th of May.

The Service commenced with an Invocation by the Manipay Church Choir and Call to worship by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar.

The Bible Lessions were read by Rev. Chandran Arnold and Mr. Joc Singanayagam. Mrs. Jeeva Ratnasabapathy sang a Thevaram. The Manipay Church Choir and Members of the Family rendered special anthems.

*Mr. I. P. Thurairatnam,* in his tribute said that Rev. Singanayagam's claim to a place of eminence in the life of our Church, was first his commitment to the work of the Church which was displayed in the Call which he obeyed, (with a stimulus provided by his mother) even though his unique sports records and achievements at school pointed to a different gradient in his career.

"Don't take to the Ministry if you can possibly resist it" was the admonition of the President of the Theological Seminary in New York, to his students. Rev. Singanayagam was one who could not resist his *Call.*

His second claim to eminence rested in the essential *goodness* in his character, a goodness characterised not merely by the absence of unseemly qualities but the presence of positive virtues as rectitude, humility and a concern for others.

His management of 72 Primary schools of the J.C.S.I.U.C, in the period 1942 — 1949, a particularly diffcult time for Christian denominational schools, was by no means, the least of his contribution to our Church.

*Rev. J. J. Ratnarajah* in his tribute said that the life and work of his colleague reminded him of the Bible verse "Enoch walked with God". Like the "skylark" immortalised by Shelley, *Singar* (as he was affectionately known to his friends) was one who not too seldom "soared" high, all the same keeping his ties to his earthly environment and in so doing elevated others to a higher pedestal.

His stature as a priest and as a man was high. Everyone had a place in his heart. One proof of his spiritual stature was that no one can make him angry or disturb his equanimity. Such a stature was the fruit of his "walking with God".

Rev. D. R. Ambalavanar preached the Sermon and Rev. Sam Thampoe led the Litany of Thanksgiving.

*JDCSI*

## Karainagar Church Circuit

The Second *News Letter* (the first to appear in formal garb in print) of the Karainagar Church Circuit is dated April 1981.

**Karainagar Church**

A highlight of Church activities this year is the Revival Meetings held in February when a group of 20 members from the Youth League of the Colombo Church added zest to the programme, which included Bible study, public address es and the staging of two plays on the Church grounds — one by the Karainagar Sunday School children and the other by the Colombo Church Youth League.

*A Study Circle* organised last year met twice in 1980 The first meeting of the *Circle* was held this year on the 28th of March. Mr. David Jeyasingh led a discussion on the subject of "*The Church and the Rehabilitation of the Disabled*".

**The Velanai Church** has *four* **four** families as regular members. The Worker at Pungudutivu, Mr. William Thevathason conducts the Church Service at Velanai at 4.30 p. m. The Communion Service is held on fourth Sunday of the month by the Circuit Pastor, Rev. T. S. Premarajah.

Some forty students, largely Hindu children attend Sunday School conducted by the Worker at Pungudutivu, before the Evening Service on Sundays.

The Velanai Church has been recently electrified and Bishop Ambalavanar officiated at a Service of Blessing in connection with the event.

**Pungudutivu Church**

The formal membership enrolment stands at 90. But most of the Members of this Church have migrated to Jaffna town, Colombo, Malaysia, United States, Middle East countries etc. They are continuing to help the mother Church in many ways.

Five girls from the Church have gained admission as Boarders to Uduvil Girls College.

Two Sunday Schools are being conducted at Pungudutivu — one for the children of the Church and the other for children in the outskirts of the island.

One young man from Pungudutivu Mr. C. K. Thevanesan is a third year student at the Tamil Nad Theological College at Madurai. He will be completing his B. D. Course in 1983.

**Neduntivu Church**

Rev. S. C. Arnold and Mrs Arnold are doing useful work here. Some 28 Hindu children attend Sunday School conducted by the Pastor of the Church.

One of the members of the Church having completed his Teachers' Training has been posted to the Neduntivu Maha Vidyalaya.

The small industries started by the Evangelistic Committee have been successfully organised. Some of the finished products will soon find a place at our retail point of the Varany farm in the Jaffna New Market.

---

The Service concluded with prayer and benediction pronounced by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar.

*DDC*

## UNP Propaganda Meetings in the North

The first UNP propaganda meeting in the North was held at Karainagar, on 11-5-81. Other meetings, it is learnt, will be held in Manipay, Kankesanthurai, Jaffna, Nallur and Kayts electorates.

Minister Gamini Dissanayake is expected to preside over the meeting at Nallur. At the climactic meetings to be held later in May, the Prime Minister is expected to address propaganda meetings in the North in favour of the UNP nominees.

Minister Festus Perera is in overall charge of organising these meetings. He is being assisted by Mr. K. Kaneshalingam, UNP Party Organiser in the North.

## The TULF Propaganda Meetings

At a meetineg held at Kilinochi, presided over by Mr. V. Anandasangari, M. P., the TULF candidate, Mr. B. Krishnarajah said that at the DDC Elections, the TULF will get ten seats.

At Batticaloa, Mr. M. Sivasithamparam M. P. for Nallur speaking at a meeting on 9-5-81 presided over by Mr. Kasi Ananthan, TULF Party Organiser at Batticaloa, said that the direction which the Development Councils would take, cannot be turned at will, by anyone to suit his own political whims and fancies. Without the approval of the General Council, not a cent of the funds could be appropriated for development in the District.

The most important problem facing the Development Councils in Tamil speaking areas, said Mr. Sivasithamparam is the task of preventing the colonisation of the traditional homelands of the Tamils.

Two minutes silence was observed at the commencement of the meeting as a mark of respect for Irish Republican Guerilla, Bobby Sands who fasted to death in a prison hospital outside Belfast to back his demands for political prisoner status for jailed Republicans.

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY OF

**Mercy Nesaratnam Paramanantham**

Born: 30-01-1926
Departed: 18-05-1978

Fondly Remembered and sadly missed
Husband, Sons, Daughters, Daughter-in-Law, Grand sons and other Loved ones in Sri Lanka and overseas.

## IN MEMORIAM

IN LOVING MEMORY OF

**Kirubairatnam Saravanamuthu**
**(Kirubai Acca)**

Called Home: 23rd May 1979

"*A Woman of Faith and Good Works*"

Fondly remembered and sadly missed by the loved ones, Church and Community.

'Santha Vasa'
Chavakachcheri.

## Personal

Mr. Ranjan Mather, with his family was on a holiday in Jaffna. He is a lecturer at the University of Botswana and a Training Officer for young African Assessors. He lectures on taxation and accounts.

He is the son of Rev. B. Ç. D. Mather and Mrs. Mather of 36, Frazer Avenue, Dehiwela.

*IN BRIEF*

- *Justice Sri Skandarajah Memorial Lecture* this year will be delivered by Mr. S. Vinayagamorthy, Lecturer of the Jaffna University on May 16 at the Navalar Mani Mandapam, Kew Road, Colombo 2 on the subject "திருக்கோண்டின் நெறி".
- *Ghana's Church Union* — The Synod of the Presbyterian Church of Ghana has postponed the proposed Church Union of the Presbyterian, Methodist and Evangelical Presbyterian Chürches from January 1981 (as was contemplated) to a period between August 1982 and April 1983.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141 ] 15 — 5 — 1981 [ இதழ் 20


## சபையும் சமுதாயத் தேவையும்

செயல்பாடற்ற அங்கமுடைய பிள்ளைகளுக்காக ஒரு இல்லத்தை அமைத்து அவர்களைப் பராமரிக்கவும் படிப்பிக்கவும் சுகமடையக் கூடியவர்க்குச் சிகிச்சை அளிக்கவும் ஆதீனம் எடுத்துவரும் முயற்சிகளை மெச்சுகிறோம். முதற்படியாகச் சுமார் நாற்பது பிள்ளைகளுக்குச் சாதி, சமய வேறுபாடின்றி இவ் வசதிகள் அளிக்கப்படும். முதற்படி என்கிறோம்; ஏனெனில் தேவையைப் பொறுத்தும் இம்முயற்சியினால் நம் சமுதாயம் அடையும் நன்மையைப் பொறுத்தும் இன்னும் என்னென்ன செய்யும்படி அழைக்கப்படுவோமோ அறியோம். அது எதுவாயினும் ஆயத்தமாயிருப்பது நம் கடமை – நமக்குக் கொடுக்கப்படும் ஒரு சிலாக்கியம்.

சென்ற ஆண்டில் அநாதரவான சிறுவருக்கு ஓர் இல்லத்தை அமைத்தபோது இருக்கும் தேவையில் அது துளியளவு மாத்திரமே எனப் புலப்பட்டது. எனவே அதை ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளாகவே இன்னொரு சிறுவர் இல்லத்தைத் தொடங்க வேண்டியதாயிற்று. இச்சின்னஞ் சிறாரின் முகத்திற் றோன்றும் பரிமளிப்பையும் தங் குறைகளை மறந்து படிப்பிலும் விளையாட்டிலும் அகமகிழ்ந்து அவர்கள் திரிதலையும் காண்பவர் கைம்மாறு வேறெதுவும் வேண்டிலர். அவர்கள் வருங்கால வாழ்க்கை சிறப்புற வேண்டும்; அதனால் சமுதாயம் வளம் பெறவேண்டும.

தேவைகள் ஏராளம் என்றோம். புலன் இழந்த பிள்ளைகளும் பெரியோரும் பலர் உளர். மனதிலுள்ள கோளாறு காரணமாய் அறிவிலிகள் நிலையிலிருந்து தவிக்கின்ற பிள்ளைகளும அநேகர் உளர், சிறப்புப் பராமரிப்பும சிறப்புச் சிகிச்சையும் கொடுக்க வல்ல நிலையங்கள் இவர்களுக்குத தேவை. ஆதரவற்ற வயோதபா இல்லங்களுக்கும் இடம உணடு இவ்வகைகளைக் கண்டுணாரும திருச்சபை வாளாவிருக்க முடியுமா? நனமை செய்கினறவராய்ச் சுற்றித் திரிந்த ஆண்டவரின் நாமததிலே இததேவைகளை இயனறளவற் பூர்த்தி செய்யத் திருச்சபை அழைக்கபபடுகிறதெனக் கொள்கிறோம

இதை மனதிற் கொண்டுதான் யாழ். ஆதீனம் தன் பிரதான வேலைத் திட்டங்களில சமூகப் பணிக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கிரியை செய்யத் தொடங்கியது. சமுதாய நலனுக்கான இப் பாரிய தேவைகளில் தனக்குரிய பங்கை இவ்வாதீனம செவ்வையாய்ச் செய்வதற்கு அதன கீழ்யங்கும் சபைகள ஒவ்வொன்றும், சபையினர் அனைவரும உதவிக் கரங் கொடுத்து அதைத தாங்க வேண்டியதவசியம்.

எனக்கும என் பிள்ளைகளுக்கும் சபையிடமிருந்து அல்லது ஆதீனத்திடமிருநது எனனத்தைப் பெறலாம; எனனென்ன சலுகைகளைக் கேட்கலாம என்பது நம்மிற பலரும இநதளவும் கொண்டிருநத (இப்பொழுதும் கொணடிருக்கும) கரிசனை எனறே கூற வேண்டும "எல்லாம் எனக்காக" எனபது நமது மனப்பாங்காய்ப போனது. கொடுத்தாலும் பெயர் சொலலித்தான கொடுக்கிறோம் — ஏனெனில் அதால் வரும புகழும பெயருமாவது "எனககாக" இருக்க வேண்டுமென வாஞ்சிக்கிறோம், இநத நிலை மாறவேண்டும்.

இநத ஆண்டிற்காக நமது சபைகள் போட்ட வரவு செலவு மதிப்பைத திருபபிப் பார்ப்போமானால் இதன் உண்மை விளங்கும். சபையாரிற் பலரும மனமுவந்து கொடுக்கிறோம சிலர் கொடுக்கிறோம்; மனமுவந்து அலல. இனனும சிலா கொடுககாமல விடுகிறோம்; கொடுக்காமல் விடுவதில் மனமுவந்து! எப்படியும் குறிப்பிட்ட வருமானம் வருகிறது. செலவுகள யாவும நமக்காக — ஆலயம் திருத்தல் முதலியன; பிள்ளைகள் வேலை, வாலிபர் வேலை முதலியன; ஆதீனப் பங்குப் பணம் முதலியவை. நம்மைச் சேராதவாககு என்ன பங்கைப் பிரித்து வைத்தோம? — வறியவருக்கு (திருவிருநதின காணிக்கை சபையைச் சேர்ந்த வறியவருக்கு — வீதியிலே பசியோடு நின்று பிச்சை கேட்கும் எளியவர்க்கல்ல!!,, கிராமத்திலே படிப்பதற்கு மனமிருந்தும் வழியில்லாத ஒரு பிளளைக்கு, நாம் சிந்தனைக் கெடுத்துக் கொண்ட இந்த இல்லங்களின பிள்ளைகளுக்கு — வருவாயில் ஒரு வீதத்தையாவது பிரித்து வைத்தோமா? நாம் ஒவ்வொருவரும் இதைச் சிந்திப்பது பயனுடையதாகும்.

அங்கக் குறையுடையோர் ஆண்டு என அனைத்துலகும் கணித்துச் செயலாற்றும் இந்த ஆண்டில் நமது ஆதீனம் இப்பெரிய செயலை மேற்கொள்வது பாராட்டுதலுக்குரியது அநேகமாக இப்பேர்ப்பட்ட விடயங்களைக் குறித்து நாம் சிந்திக்கும்போது, சிந்திக்கிறோம்; உடனடியான தேவை முடிந்ததும் மறந்து விடுகிறோம். ஆயினும் ஆதீனம் ஆரம்பிக்கும் இவ்வில்லத்தில் பிள்ளைகள் இருக்கும் வரையும் பொதுவாக உலகம் முழுவதிலும், குறிப்பாக நமது சமுதாயத்திலும் இவ்வகையான பிள்ளைகளும் பெரியோரும் நமது உதவிக் கரத்தை நோக்கி இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துபோக முடியாது.

### வாலிபர் ஞான ஒடுக்கம்

யாழ் ஆதீனத்தின் இரு புதிய சபைகளான காங்கேசன் துறை, இணுவில் ஆகியவற்றின் வாலிபர் சங்கங்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதியன்று காங்கேசன்துறைத் தேவாலயத்திற் கூடி ஒரு ஞான ஒடுக்கத்திற் பங்குபற்றினர். சுமார் முப்பத்தைந்து பேர் சமுகமாயிருந்தனர். காலை 10-30 மணிக்கு நடத்தப்பட்ட ஆரம்ப வழிபாட்டுடன் ஞான ஒடுக்கம் தொடங்கியது. காங்கேசன்துறைத் திருச்சபை ஊழியன் திரு. பிறின்ஸ் இரத்தினம இந்த ஆராதனையை நடத்தி, ஞான ஒடுக்கத்திற் சேர்ந்துகொள்ள வந்திருந்த அனைவரையும் வரவேற்றனர்.

காலை வேளையின் சிறப்பு நிகழ்ச்சியாக 'திருச்சபைக்குத் தூய ஆவியானவர் அருளும் வல்லமையான வாழ்வு" என்ற தலைப்பில் ஒரு சிறந்த திருமறை ஆய்வு அருள்திரு இரா. துரைராஜா அவர்களால் நடத்தப்பட்டது. சாயந்தரச் சிறப்பு நிகழ்ச்சியாக, ஆமோஸ் தீர்க்கரின் காலத்துச் சமூக, சமய சூழ்நிலையில் அவருடைய அழைப்பு, பணி ஆகியவை என்ற விடயத்தை ஆதாரமாகக் கொண்டு தற்கால நிலைகளைப் பற்றிய ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. இதை இணுவில் சபை உதவி ஊழியன் திரு. வ. இராஜ்குமார் அவர்கள் நடத்தினார்கள். இணுவில் திருச்சபை வாலிபர் சங்கச் செயலாளர் திரு. எசேக்கியேல் தேவமனோரஞ்சன் ஞான ஒடுக்கத்திற் சேர்ந்து கொண்டவர்க்கும் உதவி புரிந்தவர்க்கும் நன்றியுரை கூறினர்.

மாலை 4-30 மணிக்குச் சேகரக் குரு அருள்திரு. தா. இரா. அம்பலவாணர் அவர்கள் நற்கருணை ஆராதனை நடத்தி, வாலிபருக்கேற்ற ஓர் அருளுரை வழங்கினார்கள், இது அச்சபையின் வழமையான ஆராதனையாதலால் சபையினரும் சமுகமாயிருந்தனர்.

இந்த இரண்டு சபைகளும் சமீபகாலத்திலேதான தனிப்பட்ட சபைகளாய்ச் செயல்படத் தொடங்கின. அப்படியான நிலையிலும் இந்த வாலிபர் சங்கங்கள் ஆற்றிவரும ஊக்கமான பணிகள் மெச்சுதலுக்குரியவை. தத்தமது சபைகளுக்கு உறுதுணையான உதவிக் கரங்களாய் இவை வருங்காலத்திலும் விளங்குமென்பதே நமது காத்திருப்பு.

— ஜி.ர.

### நன்றி செலுத்தும் ஆராதனை

1932ஆம் ஆண்டு தொடக்கமாக முதல் யாழ்ப்பாணச் சபா சங்கத்திலும் தொடர்ந்து தெ. இ. திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்திலும் நல்லூழியம் புரிந்து 1976ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றிருந்து கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி காலமான கனம் ஜென்கின்ஸ் முத்துவேலு சிங்கநாயகம் அவர்களின் சீவிய ஊழியத்திற்காக நன்றி செலுத்தும் ஓர் ஆராதனை, ஆதீன சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுச் சென்ற 9ஆம திகதி பிற்பகல் 4-30 மணிக்கு மானிப்பாய்த் தேவாலயத்தில் நடத்தப்பட்டது.

அத்தியட்சர் மகாகனம் D. J அம்பலவாணர் அவர்கள், சபைக் குரு கனம் Sam தம்பு அவர்களின் உதவியுடன் ஆராதனையை நடத்தினார்கள். போதகர் அவர்களின் மகன் திரு. ஜோ. சிங்கநாயகம், மருமகன் கனம் சந்திரன் ஆர்னல்ட் ஆகியோர் வேதப் பகுதிகள் வாசித்துதவக் குடும்பத்தினர் சிறப்புப் பாடல் ஒன்று பாடினர்.

திரு I. P. துரைரத்தினம் அவர்களும் கனம் J. J. இரத்தினராஜா அவர்களும் பாராட்டுரைகள் வழங்கிப் போதகர் அவர்களின் உயர்ந்த, மாசற்ற குணதிசயங்களும் ஆர்வம் மிகுந்த தெய்வப் பணியும் அவர் ஊழியம் செய்த இடங்களிலெல்லாம் சபையினர் உள்ளங்களில் அவருக்கு இடமெடுத்துக் கொடுத்தன எனக் குறிப்பிட்டார்கள், கனம் D. R. அம்பலவாணர் அவர்கள் 116ஆம் சங்கீதத்தின் 15ஆம் வாசகத்தை ஆதாரமாகக்கொண்டு அருளுரை ஆற்றி, மரணம் நித்திய வாழ்விற்கு வாசலைத் திறந்து விடுகிறபடியால் அது வாழ்வின் அறிகுறி எனவும் கர்த்தருடன் தம் வாழ்க்கையை நடத்துகிறவர்கள் மரணத்திற்கும் அஞ்ச வேண்டியதில்லை எனவும் அதனையிட்டே பக்தர்கள் "வம்மின், வம்மின் ......... மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்திடுவோம்" எனப் பாடக் கூடியதாய் இருக்கிறார்கள் எனவும் எடுத்துக்காட்டினார்கள்.

மகாகனம் அத்தியட்சர் அவர்கள் ஏறெடுத்த செபத்துடனும் அருளிய ஆசீர்வாதத்துடனும் ஆராதனை நிறைவுற்றது.

### பிள்ளைகள் விழாவிற்கான ஒழுங்குகள்

வரும் ஜூலை 18ஆம் திகதி நடைபெறவுள்ள வருடாந்த ஆதீனப் பிள்ளைகள் விழாவிற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பிரதான அம்சங்கள் பின்வருமாறு :-

பிள்ளைகளின் பாட்டுப் போட்டிக்கான பாட்டுகள் ( புதிய பாட்டுப் புத்தக இலக்கத்தின்படி

(1) 42 — சிந்தனை செய்து மகிழ் வேன்

(2) 76 — சுந்தர மைந்தனை வானகத்தோர்

(3) 116 — இயேசு நாமமல்லாமல் — உலகினில்

(4) 156 — தேவ மைந்தா பெந்தெக்கோஸ்தின் திருவரம் தா

(5) 355 — ஜீவ வசனங் கூறுவோம்.

இவற்றில் இலக்கங்கள் 1, 3, 5 — புதியவை. இம்மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இலவச்சான பயிற்சி வட்டுக்கோட்டையில் நடத்தப் படவுள்ளது.

சில வருடங்களாக நடத்தப் பட்டுக்கொண்டு வரும் விருத்தப் பாடற் போட்டி இந்த முறையும் இடம்பெறும். இது மதுரம் குலேந்திரன் ஞாபகார்த்தப் போட்டியாகும். இது இரண்டு வயதுப் பிரிவில் நடைபெறும். பதினாறு வயதுக் குட்பட்ட பிள்ளைகள் புதிய பாட்டுப் புத்தகத்தில் பின்வரும் இலக்கங்களைக் கொண்டவற்றில் ஏதாலும் ஒன்றைத் தெரிந்து பாடலாம். 3, 10, 25, 28 இருபத்தொரு வயதுக் குட்பட்டவர்கள் புதிய புத்தகத்தின் பொருளடக்கத்தில் போட்டிருக்கும் தேவாரங்களில் மேற் கூறியவை தவிர்ந்த ஏதாலும் ஒன்றைத் தெரிந்து பாடலாம். இப்போட்டியில் வெற்றி பெறுபவர்க்கு வழமைபோல ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விருத்தப் பாடற் போட்டிகள் ஜூலை மாதம் 11ஆம் திகதி மானிப்பாயில் நடைபெறவுள்ளன.

# வெறுமையான கல்லறை கூறுவது என்ன?

— ஜெயகுமார் மேதர் —

"கிறிஸ்து உயிரோடெழுப்பப்படவில்லையெனில், நாங்கள் அறிவிக்கும் செய்தியும் பொருளற்றதாகும். உங்கள் நம்பிக்கையும் பொருளற்றதாகும்." 1 கொரி 15:14

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ வரலாற்றின் மூலைக்கல். கிறிஸ்தவன் ஒருவன் நன்னம்பிக்கையுடன் வாழ்கின்றான் எனின், அது இயேசுக் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த நிகழ்ச்சியின் நிமித்தம் என கூறுவது மிகையாகாது. நாகரீகம் கொடியேற்றி, வானளாவில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகிலே இறைவன் இயேசுபிரான் மரித்தோரிலிருந்து உயிர்பெற்றெழுந்தமை ஓர் வினாக்குறியாக, மனுமக்கள் ஒவ்வொருவரினதும், சிந்தனைக்குதிரைகளை, தட்டி, ஓட வைத்துள்ளது. நமது நாட்டில்...ஏன்...? இவ்வையகத்தில் "இயேசு" என்பவர் ஒரு பெரியார், மனுமைந்தர் யாவரிலும் சிறந்தவர் என ஏற்கின்றார்கள். ஆனால் அவர் "இறைவன்" என்பதை ஏற்க மறுக்கிறார்கள். அவர்கள் தாம் காண்பவைகளையே, ஐயத்துடன் உற்று நோக்கும் மானிடர். அவர்களுக்கு "இயேசு" உயிருடன் எழுந்தார் என்பதும் ஐயமாகவே உள்ளது. இயேசுவின் உயிர்த்தெழுதல் எழுத்தில் மாத்திரமேயன்றி, அது உண்மையில் நிகழவில்லை என்று தர்க்கித்து, வாதாடுவோர் அநேகர்,... அநேகர்.

'கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்படவில்லையென்றால் எங்கள் செய்தி பொருளற்றது, உங்கள் நம்பிக்கையும் பொருளற்றது" என்கிறார் புனிதர் பவுல் அடியார். இயேசு பெருமான் உயிர்பெற்றெழாவிட்டால் கிறிஸ்தவ சமயம் நிலைநிற்க எவ்வகையான ஆதாரமும் இல்லை. ஆதலால் இயேசு பெருமான் உயிர்த்தெழுந்தாரா......? இல்லையா...? என்பதை திட்டமும், தெளிவுமாக அறிய முயல்வது மிகவும் முக்கியம்.

தெசலோனிக்கியச் சபைக்கு புனிதர் பவுல் அடியார் எழுதிய முதல் கடிதம் கி. பி 51-ம் அல்லது 52-ம் ஆண்டில் எழுதப்பட்டது என்றும், இரண்டாம் கடிதம் கி. பி. 53-இல் எழுதப்பட்டது என்றும் திருமறை நூல் ஆராய்ச்சியாளர், ஆதாரங்களுடன் கூறுகின்றனர். முதற் கடிதத்தில் "இயேசு இறந்தோரிடமிருந்து கடவுளால் உயிருடன் எழுப்பப்பட்டவரும், நம்மைத் தெய்வசினத்தினின்று விடுவித்து மீட்பவர்" 1[10] என்றும் "இயேசு இறந்து, பின், உயிரோடு எழுந்தார் என்று நம்புகிறோம்" 4[14] என்றும் "கட்டளைக் குரல் ஒலிக்க, தலைமைத் தெய்வதூதரின் ஆரவாரமும் முழங்க, ஆண்டவர் தாமே வானுலகிலிருந்து இறங்கி வருவார்" 4[16] என்றும், புனிதர் பவுல் அடியார் எழுதியுள்ளார். இவ்வெழுத்துக்களிலிருந்து, புனிதர் பவுல் அடியார் இக்கடிதங்களை எழுதும் வேளையில் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை சபை மக்கள் யாவரும் ஏற்றுக்கொண்டார்கள் என்பது துணிபு. பவுல் அடியாரின் இரண்டாவது நற்செய்தித் தொண்டுப் பயணத்தில் (கி. பி. 51) தெசலோனிக்கிய சபை உருவாகியது. அதாவது இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின் 15 ஆண்டுகளினுள், இந்த உண்மை யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இறந்துபோன சில பெரியார் பிற்காலத்தில் தெய்வங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு போற்றப்படுகின்றனர். ஆனால் இறந்த 15 ஆண்டுகளினுள் இறந்த மனிதன் தெய்வமாய் கருதப்பட்டதாக வரலாற்றில் இல்லை. ஒரு மனிதன் தெய்வமாக கருதப்பட பல ஆண்டுகள் கழிய வேண்டும். மேலும் தவறை உண்மையென்று நிலைநாட்ட பல புனை கதைகளைக் கொண்டு உறுதிப்படுத்த முயற்சிகள் எடுப்பது இயல்பு. ஆனால் இங்கு புனிதர் பவுல் அடியார் எழுதிய கடிதத்தில் இயேசு உயிர்த்தெழுந்த உண்மையை, மெய்ப்பிக்க எவ்வித முயற்சியும் கையாளப்படவில்லை. "இயேசுவானவர் உயிர் பெற்று எழுந்தார். விரைவில் சிறப்புடன் திரும்பி வருவார்" இந்த நம்பிக்கையே தெசலோனிக்கியச் சபை மக்களின் சிந்தனையில் ஆழமாகப் பதிந்திருந்தது.

ஆனால் கொரிந்து சபையைப் பொறுத்தமட்டில் இயேசு உயிர்த்தெழும்பினார் என்பது சிலரின் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது.

(தொடரும்)

---

## பாப்பரசர் தாக்கப்பட்டனர்

பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் அவர்கள், சென்ற புதன்கிழமை 13ஆம் திகதியன்று மொகமட் அலி ஆக்கா எனச் சொல்லப்பட்ட ஒரு இஸ்லாமிய தீவிரவாதியினால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டனர். 64 வயதான பாப்பரசர் மீது மூன்று துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. சுமார் ஐந்தரை மணி நேரம் நீடித்த சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து அவர்களின் உடல் நிலை குணமடைந்து வருவதாகச் சொல்லப்பட்டது. எனினும் இன்னுமொரு தடவை அவர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்யப்பட வேண்டியிருக்குமெனச் செய்திகள் கூறுகின்றன. அவர்களின் வயிற்றுப் பகுதியில் குண்டு ஏறிப் பாய்ந்த காயம் மிகவும் நீண்டதானதால் அவர்கள் அதிகம் இரத்தத்தை இழந்து போனார்களெனவும், இருந்தும் அவர்களின் உடல் நிலை திருப்திகரமாய் இருக்கிறதெனவும் பாப்பரசர் சிகிச்சை பெற்று வரும் ரோம வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் கூறியுள்ளார்.

பாப்பரசரை சுட்டுக் கொல்ல எத்தனித்தாகக் கூறப்படும் 23 வயதான துர்க்கிய தீவிரவாதி 1979ஆம் ஆண்டில் பாப்பரசர் துருக்கிக்கு விஜயம் செய்திருந்தபோது அவர்களைச் சுடுவதாகச் சபதம் போட்டிருந்தனர் எனவும் அதனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் அதிகப்படுத்தப்பட்டதெனவும் கூறப்படுகிறது. ஒரு பத்திரிகையாசிரியரைக் கொன்ற குற்றச்சாட்டில் மிகப் பாதுகாப்பான சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அலி ஆக்கா, பாப்பரசரின் துருக்கி விஜயத்திற்குச் சொற்ப நாட்கள் முன்னதாகவே தப்பியோடித் தலைமறைவாகினர் எனவும், அந்தக் குற்றச் சாட்டில், தோன்று முறையில் அவர் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இவரை அடையாளம் காணும்படியும் ரோமப் பொலிசாருக்கு உதவும் பொருட்டும் இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் துருக்கியிலிருந்து ரோமாபுரிக்குச் செல்ல ஆயத்தமாகினர். இத்தாலிய அரசாங்கம் இவர் மீது எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இவர் துருக்கிக்கு அனுப்பப்படுவாரெனவும் அங்கே ஒரு நாட்டின் தலைவரைக் கொல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டு இவர்மேற் சுமத்தப்படுமெனவும் நம்பப்படுகிறது. துருக்கியில் இது ஆயுட்காலச் சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இஃதிவ்வாறாக, இலங்கையிலிருந்தும் உலகத்தின் வேறு பல பாகங்களிலிருந்தும் பாப்பரசர் தாக்கப் பட்டதையிட்ட அனுதாபச் செய்திகளும் அவர் விரைவில் குணமடைவதற்கான வேண்டுதற் செய்திகளும் பாப்பரசர் மனைக்குச் சென்றபடியிருக்கின்றன. இலங்கையில் கொழும்பின் பிரதம மேற்றிராணியார் பாப்பரசர் அவர்களின் குணப்படுதலுக்கான திருப்பலி ஆராதனை வரும் ஞாயிற்றுக்கிழமை, 17ஆம் திகதியன்று, எல்லா ஆலயங்களிலும் நடத்தப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

---

## நற்செய்திப் பணி

[ நற்செய்திப் பணி வாரத்தை முன்னிட்டு "தாரகை" யில் முன் வந்த ஒரு ஆசிரியர் கருத்தைச் சில மாற்றங்களுடன் தருகிறோம். பயன்படும் என்ற நிச்சயம் நமக்குண்டு ]

இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் பிறநாட்டு நற்செய்திப் பணி ஓய்வு நாளை நாம் அனுசரித்த வேளையிலே அதையிட்டுத் "தாரகை" யிற் பின்வருமாறு குறிப்பிட்டோம்:

"பிறநாட்டு நற்செய்திப் பணியென்றும் உள்நாட்டு நற்செய்திப் பணியென்றும் இடையிடையே நாம் சிந்திப்பதும் செயலாற்றுவதும் உண்டு. எனினும் செயலாற்றியது சிறிதளவு; ஆற்றுவதற்குள்ளதோ அளவிடற்கரியது. அதுவுமல்லாமல் சபையாகச் செய்வதற்கு ஓர் இடமுண்டு தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இதிற் பிரதான பங்குமுண்டு. மீட்பின் நிச்சயத்தை நான் பெற்றுக் கொண்டதுண்டானால் அதை என் அயலகத்தானும் பெறவேண்டும் ......எனவே நற்செய்திப் பணியைப் பிறர்க்குரிய கருமமெனக் கூறித் தட்டிக் கழிக்க முயல்வது தவறான காரியம்"

ஒரு ஆதினமாக (உள்நாட்டு) நற்செய்திப் பணி நாட்களைத் திரும்பவும் அனுசரிக்க நாம் ஆயத்தமாகும் இந்நாட்களிலே இதை நினைவூட்டுவது உசிதமெனச் சொல்கிறோம். இதையிட்டு வழமையாக நாம் செய்வதென்ன? இத்துறையில் ஆதினம் செய்யும் வேலையை நினைவு கூருகிறோம்; அதற்காகச் செபிக்கிறோம்; நமது பங்கென ஒரு கொடையையும் கொடுக்கிறோம். அதுவே போதுமென்றிருப்பதா? அதைக்கூடத் தாராள மனப்பான்மையுடன் நாம் செய்து கொண்டு வந்தோமா? இவை சிந்தனைக்குரிய கேள்விகள்.

நமது ஆதீனத்தில் அறுவடை ஏராளம் — மிகவும் ஏராளமென்பதை மறுப்பவர் எவருமிலர். நற்செய்தியைப் பெற வேண்டியவர் தொகை எண்ணிறந்தது. அவர்கள் மத்தியிற் செய்யப்பட வேண்டிய வேலை அளவிறந்தது. நம் சார்பில் அதைச் செய்வதற்கு நாம் கொடுப்பது — கொடையளவில் — எம்மாத்திரம்? மனதாரக் கணக்கிட்டுப் பார்ப்போமா? நம்மில் ஒவ்வொருவரும் கொடுக்கும் கொடை ஒரு வருட காலத்திற்கு ஒருவர் நிமித்தம் நற்செய்திப் பணி செய்வதற்குப் போதியதாய் இருக்குமாயின் அது எவ்வளவு மேன்மையான காரியமாகும்! அதன்மூலம் எத்தனைபேர் மத்தியில் இவ்வரிய வேலை செய்யப்படக்கூடியதாகும்! இம்முறை நமது கொடைகளைக் கொடுக்கும் போது இதை மனதில் வைத்திருப்போமா?

சபையாகவும் தனியாட்களாகவும் நாம் செய்வதற்கும் ஒரு பங்குண்டு. உள்நாட்டு நற்செய்திப் பணி ஞாயிறு எனவும், விழாவெனவும் முறையே வாரத்தின் முதல் நாளையும் இறுதி நாளையும் அனுசரித்து வந்துள்ளோம். இவ்வாரம் முழுவதையுமே நற்செய்திப் பணி வாரமென நாம் கணித்து அதற்கேற்றபடி செயலாற்றுவது பயன்தருமெனக் கருதுகிறோம். நமது அயலகத்தார் மத்தியில் தனியாட்களாகவும் சேகரத்தில் வசிக்கும் கிறிஸ்தவரல்லாதோர் மத்தியில் சபையாகவும் இப் பணியை ஒரு விசேட முறையிற் செய்வதற்கு இது உதவியாகும். வேதாகமப் பிரதிகளையோ பகுதிகளையோ பெற்றுக் கொடுத்து உதவலாம், இலங்கையின் வேதாகமச் சங்கம் இதற்கான உதவிபுரிய ஆர்வத்துடன் முன்வருகிறது. துண்டுப் பிரசுரங்களையும் பெற்றுக்கொடுக்கும் வசதிகள் உள. பிரச்சனைகள் உள்ள குடும்பங்களையும், நோய்வாய்ப்பட்டும் தனிமையிலும் இருப்போரையும் தனியாட்களாகவாகிலும் சந்தித்து ஆறுதல் கூறலாம். இப்பேர்ப்பட்ட சேவைக்குப் பெரிய ஆயத்தங்கள் தேவையில்லையே — ஆர்வமுள்ள மனமொன்றே போதியது. இந்த வாரத்திற் செய்யும் வேலைகளுக்கூடாய் ஒவ்வொரு சபையும் ஒரு குடும்பத்தையாகிலும் கர்த்தரிடம் கொண்டுவரக்கூடுமானால் சுமார் நூறு ஆத்துமாக்களாவது மீட்பின் வழியைக் காணக் கூடுமே.

இந்த மாதம் திரும்பவும் நற்செய்தி வாரத்தை அனுசரிப்போம். இத்தனை ஆண்டுகளாய் நமது குடாநாட்டின் மக்கள் மத்தியிலே நற்செய்தியைப் பரப்பி வந்த அடியார் யாவரையும், அவர்கள் அதற்காய்த் தம்மை ஒறுத்தர்ப்பணித்த சிந்தையையும், அச்சிந்தையை அவர்களுக்கருளிய ஆண்டவன் கிருபையையும் நினைத்து விழாவெடுப்போம். தாற்பரியத்துக்குகந்த ஒரு விழாவாய் அது அமையட்டும். அதைப் பெருவிழாவாக்க நாமெல்லாரும் அதிற் சேர்ந்து கொள்ளுவோம், வாருங்கள். நற்செய்தி கூறுவித்து நம்மைத் தம் திருப்பாதம் அழைத்திடும் கர்த்தரை அடிபணிந்து வணங்கி, அப்பெரும் பணிக்கு நம்மையும் அவர் அழைக்கும் அழைப்பை புணர்ந்து, அதற்கென நம்மை அர்ப்பணிப்போம், வாருங்கள்.

"உனக்கூடாக இன்னொருவர் கர்த்தரைக் கண்டவர் என்கிலும் அல்லது கர்த்தருக்கு இன்னும் கிறிதளவு கிட்டி வந்தனரென்கிலும் அறிவதிற் காணும் மகிழ்ச்சியைப் போன்ற வேறேது மகிழ்ச்சியும் உலகிலில்லை"

— லெஸ்லி வெதர்ஹெட்
(தமிழாக்கம்)

EDITORIAL

## Living with People

The Seventh Assembly of the Christian Conference of Asia meets in Bangalore from May 18 to 28, on the theme *Living in Christ with People*.

Four years ago, when the last Assembly met in Penang in 1977, the theme was "Jesus Christ in Asian Suffering and Hope." The Assembly theme this year is a corollary, and underlines the truth that the only way we can discern Christ's presence in Asian suffering is by living in Christ with people.

One of the most significant changes in the thinking of the Asian Churches since the Inaugural Meeting of the CCA held in Kuala Lumpur in May 1959, is the conviction that their identity as Asian Churches is not separate from or unrelated to, the identity of the larger community.

As we write these notes, we have before us the testimony of a Chinese Evangelical, Sister Jeang Peifen, on what it has meant for her to be a Christian in China.

Her involvement with the three Self Movement in China (a self-administered, self-supporting and self-propogating Church) has led her to what she calls her "second liberation" [The first liberation was when she became a Christian.]

According to Sister Jeang, the Christian gets his "second liberation" not when he speaks glibly of the many sins people are *capable of committing* but when he gets a correct understanding of how people are capable of oppressing others and dehumanising themselves.

Some of the most harrowing reports in recent times of oppression and dehumanisation come to us from EL SALVADOR where from June 1980 to January 1981, the army and Security forces had killed 202 children, 58 of whom were between the ages of 1 to 10 years of age.

It is also a significant coincidence that the Seventh Assembly of the CCA, with its theme "Living in Christ with people" falls in the same year (1981) and the same month (May) when the South African Council of Churches has called for a period of "penitence" instead of "celebration" in response to the Government's decision to celebrate in an appropriate manner the 20th Anniversary of the founding of the Republic of South Africa.

The Resolution on "Republic Day of South Africa" passed by the SACC's National Executive, states the untarnished truth that for three quarters of the inhabitants of South Africa, there is nothing to celebrate on Republic Day in May 1981.

In this context, it is heartening to note that the Quaker organisation, *American Friends Service Committee* (founded 1917), which, as co-recipients of 1947 Nobel Peace Prize, is entitled to make a nomination each year has nominated *Bishop Desmond Tutu*, General Secretary of the SACC for the Nobel Peace Prize 1981.

The passport of Bishop Tutu, it may be recalled, was withdrawn early in March 1980 by the then Minister of Interior but was returned to him on the 22nd of January this year, after repeated requests by the SACC and the intervention of International political leaders and diplomats.

This is the backdrop in which the Seventh Assembly of the CCA is meeting this month to discuss the theme "Living in Christ with *People*."

At the same time, we hear so much today of "*development*" especially in Third World countries and even wonder if we have not come nearer the millenium.

But it is a grim reflection that people of the Third World today in their environment are unable to see the difference at times between the churches and the society which pushes them to the margin and beyond.

The role of the Churches in the present Asian predicament, has never been more clear. The January issue of *Info on Human Development*, a publication by the Asian Bishops' conference Office for Human Development has this significant comment on the Church in *Korea*.

> In all Korean dioceses, more Buddhists are coming to Church services. When asked in a poll, what their religion was, 28 per cent of Seoul workers said they were Christians, though only 10 per cent of the population is Christian.

When asked to explain this position, one Korean Bishop said, "when we speak and work for justice, we touch something deep in the hearts of people and they are drawn to Christ."

The real need of the Asian countries is not aid but *justice*. Cardinal Stephen Kim and Poet Kim Chi Ha have spoken and worked for justice in Korea for many years. The Poet was released from prison after a long spell, only in February this year.

To live with people and obtain justice for them, the Church should, in the words of Cardinal Kim, "*like a candle, consume itself and endure burning while it sheds the light.*"

## Mission with Mutilated Hands

[Extracts from a Paper presented by Dr. Kosuke Koyama, a Japanese Theologian at Melbourne in May 1980.]

The sincerity of the crucified Christ was expressed not in the brilliant formula of theologians in the seminary library but in the taunting words of the people who were passing by: — "He saved others, He cannot serve himself."

He exposed human dominance not from the luxury of an arm chair but by abandoning himself to human dominance, even to Crucifixion. What a painful and inefficient way to expose human deception! This efficient way is the secret of his power which confronts human power.

**Mutilated Hands**

The Mutilated hands of Christ represent the sincerity of God towards all humanity. What an image — mutilated hands! Hands are a symbol of technology.

Are not our hands reaching the moon and beyond by our science and technology? Are not our hands changing our living environment to suit our liking? Do not powerful engines obey the signals we give by our fingers? Are they not capable of sending lethal weapons to destroy our enemies? *Our hands are powerful.*

**The Fertility God-Baal**

Technology is an efficient arrangement to 'duplicate' things. By the printing press news papers can be duplicated by the thousands. By motor engines distance can be duplicated under the rotation of the wheel.

But the ability to duplicate is today dangerously divorced from the discussion of the meaning of such abilty. *Efficiency is suffocating meaning.* The good is impoverishing the best.

The fertility God Baal is becoming stronger than the covenant God Yahweh. Meaning is subordinated to efficiency. When meaning is subordinated to efficiency, the attractive hands appear. The attractive hands often direct our minds to the fascination of idolatry. Who will make an idol out of mutilated hands?

**The World of efficiency**

Technology may be permitted to duplicate anything but not human beings. The machine must be switched off when it begins to duplicate the image of God in humans. It must not desacrilise the holy in people.

What does it mean to duplicate human beings? Today perhaps one could speak of the duplication of the human in the sense of biological science.

But I am thinking at this moment of the surrendering of human space and human time to the efficient technological space and technological time.

The crucified Christ challenges such a technologically efficient way of dealing with people. Technology must serve the maintenance and development of human values, the value of sincerity and reliability in the human community. The lifestyle of the Atlantic world is not the standard for all humanity. It must be judged together with other life styles under the light of the crucified Lord.

**Bureaucracy**

Bureaucracy is a world of filing cabinets and endless classification. *It can reduce a living person into a set of numbers one sees on his or her passport.* Information is stored in the cabinet alphabetically.

The infinite amount of information about people can be used for the welfare of people. Then bureaucracy is practising the mind of the reign of God.

But it can also use the information to destroy people. Both the Nazi and Japanese bureaucracies operated with remarkable efficiency to destroy the lives of peoples of Asia and Europe. Without bureaucratic systems both militarism and racism cannot work.

We appreciate bureaucracy. But it must be in the hands of the responsible king *(Melek)* and not in the hands of the irresponsible king *(Melek)* who seeks human sacrifice (Jer. 32:35).

The most extreme example of the triumph of meaning over the *idolatry of efficiency* is the crucifixion of Christ. There Christ demonstrated the depth of his sincerity in the most painful and "inefficient" way. It takes suffering to expose idolatry. Technology and bureaucracy tell us today, "peace, peace". Is there peace?

## A Bossey Seminar

*Death and Life in Different Cultures* will be the subject of a Seminar from the 15th to the 20th of June this year at Bossey. It is intended not merely for doctors, pastors and people involved in healing professions but to all who are trying to combat the violence of death.

In the Industrialised world, people are concerned with the prolongation of 'life'. In the poor countries, death is an everyday experience. 'People are killed violently by starvation, torture, armaments and sickness'. People also commit suicide and die because of loneliness.

Christian witness tries to bring death and life closer together. It is a struggle, suffering and a victory over the uncanny power of death.

In the meanwhile in India, the *Mercy-Killing Bill* sponsored by a Private Member was opposed by many on the ground that it was "a luxury" to pass the Bill when problems of poverty, hunger and illiteracy stalked the land.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB /100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 15th May, 1981.